DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| Name : திரு.தங்கவேல் | Father/Husband Name : சக்கரை |
|---|---|
| Age : | Village : திருத்தங்கல் |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 Mar 2026 11:33

(Accused not Present. Petition under Section 317 CrPC filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் திருத்தங்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் ஆமத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு இருக்கன்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அம்மாபட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தேன். 12.11.2021 ஆம் தேதி நான் அம்மாபேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, அந்த காவல் நிலைய குற்ற எண் 14/2021 குற்ற வழக்கை நான் என்னுடைய இறுதி புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். எனக்கு முன்பாக அந்த வழக்கை உதவி ஆய்வாளர் சந்தானம் மாரிமுத்து மற்றும் அவருக்கு முன்பாக உதவி ஆய்வாளர் ராஜ்குமார் ஆகியோர் புலன் விசாரணை செய்துள்ளார்கள்.

3. இந்த வழக்கு மந்திரமூர்த்தி சண்முக ராணி மற்றும் அவர்களின் மகள் நந்தினி ஆகிய மூன்று நபர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனக்கு முன்பு வழக்கை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் சந்தானம் மாரிமுத்து இந்த வழக்கு சம்பவத்திற்கும் நந்தினிக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறி அவரை வழங்கி இருந்து, வழக்கில் இருந்து நீக்கம் செய்து 21.03.2021 ஆம் தேதி எதிரி நீங்கள் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது இந்த வழக்கில் ஏற்கனவே தயார் செய்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சரியாக இருந்ததால் நான் தனியாக அவற்றை தயார் செய்யவில்லை. அன்றைய தினம் வழக்கு எதிரிகளை தேடி சென்ற போது சுந்தர குடும்பன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து எதிரிகள் மந்திரமூர்த்தி மற்றும் அவருடைய மனைவி சண்முக ராணி ஆகிய இருவரையும் காரணம் கூறி கைது செய்து, அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து, இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். நான் எனக்கு முன்பாக வழக்கை விசாரித்த புலன் விசாரணை அதிகாரிகள் விசாரணை செய்த சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரித்த போது அவர்கள் ஏற்கனவே கூறியது போல் கூறியதால் அவர்களின் வாக்குமூலங்களை தனியாக பதிவு செய்யவில்லை.

5. என்னுடைய விசாரணையில் இருந்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு 12.11.2021ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

6. இந்த வழக்கு புகார்தாரர் பாக்கியலட்சுமி என்பவருக்கும் எதிரிகளுக்கும்

அவர்களின் வீட்டு முன்பு உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை பயன்படுத்துவது தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அதனால் மேற்படி பாக்கியலட்சுமி கொடுத்த புகாரின் அடிப்படையில் அம்மாபட்டி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த இரண்டு வழக்குகளிலும் எதிரிகள் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை. எனக்கு அந்த விபரம் தெரியும் என்றாலும், நான் அவற்றை வழக்குக்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. மேற்படி பாக்கியலட்சுமி என்பவரின் உறவினர் தங்கமுத்து என்பவர் சிவகாசி உட்கோட்டத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறார் என்றால் தங்கமுத்து என்ற காவலர் பணி புரிகிறார் என்பது தெரியும், ஆனால் அவர் பாக்கியலட்சுமி உறவினரா என்பது எனக்கு தெரியாது. அவர் பாக்கியலட்சுமி உறவினர் என்றாலும், அவருடைய ஆதரவின் பேரில் தான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அதை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. ஒன்றாவது எதிரி அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு அவருக்கு விபத்து ஏற்பட்டு, அவருடைய காலில் பிளேட் வைக்கப்பட்டுள்ளது என்றாலும், அதனால் அவரால் சரிவர நடக்க முடியாது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், அது வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அதை மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய விசாரணையில் பாக்கியலட்சுமி எதிரிகள் அருவாளை அவருடைய கையில் கொண்டு போய்விட்டார்கள் என்று கூறினாரா என்றால் இல்லை.

9. வழக்கு சம்பவம் எவ்வளவு நேரம் நடைபெற்றது என்பது என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் காலை 8 மணிக்கு நடைபெற்றதாக தெரியவந்தது, ஆனால் எவ்வளவு நேரம் நடைபெற்றது என்பது தொடர்பாக சாட்சிகள் எதுவும் கூறவில்லை. பாக்கியலட்சுமி மற்றும் எதிரிகளின் வீடு அருகே குடியிருக்க கூடிய நபர்களை நான் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்துள்ளேனா என்றால் சாட்சிகள் தங்கபாண்டியன் மற்றும் தங்கவேலம்மாள் ஆகிய இருவரையும் விசாரித்துள்ளேன். நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்பதால்தான் சாட்சிகளிடம் மறு வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 – பாக்கியலட்சுமி கூறியுள்ளது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் எவ்விதமான குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றாலும், அவர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நிளம் பிரச்சனையை மனதில் வைத்து பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரியின் அடிப்படையில் எதிரிகள் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. 17 Mar 2026 11:49

Judicial Magistrate 2, Sattur.